சேர்க்கப்படத்தக்கதாக இருந்தன. ஆனால், மேற்படி பத்து கிராமங்களைக் கொண்ட முக்கூடல் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் ஆண்டு சராசரிப் பதிவு 1,002 ஆக இருக்கும். இது ஓர் உதவிப் பதிவாளருக்கும் அவரது அலுவலகப் பணியாளர்களுக்கும் போதிய அளவு வேலை உள்ளதாக இருக்காது. அந்த நிலை ஏற்பட்ட பிறகு இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 195, 196 ஆகிய எண்ணுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

உபரி நிலங்களைப் பயன்படுத்தல்

*197 வினா—**திரு. அ. தேவேந்திரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் உபரியாகக் கிட்டும் நிலங்களை மாதிரிக் கூட்டுப்பண்ணை முறையில் செயல்படுத்தும் திட்டம் ஏதேனும் இவ்வரசிடம் உள்ளதா,

THE HON. THIRU P. U. SHANMUGAM: There is no scheme for utilisation of the surplus lands through model Co-operative Farming Societies. The surplus lands are assigned to the various categories of persons in accordance with the rules framed under the Land Ceiling Act in the order of priority laid down therein.

திரு. என். கிட்டப்பா: நில உச்ச வரம்புச் சட்டத்தின்மூலம் 15 ஸ்டாண்டர்டு ஏக்காராதான் உச்ச வரம்பு என்று நிர்ணயித்த பிறகு உபரி நிலம் தமிழகத்தில் எவ்வளவு கிடைக்கும். அது எந்த எந்த வகையினருக்குப் பிரித்தளிக்கப்பட இருக்கிறது, எவ்வளவு எவ்வளவு அளிக்கப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1971 ஆம் ஆண்டு கொண்டு வந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்குப் பிறகு எவ்வளவு உபரி நிலம் கிடைக்கும் என்ற புள்ளி விவரம் இப்பொழுது என் கையில் இல்லை. ஏற்கெனவே நிலச் சீர்திருத்தச் சட்டம் போட்டபோது நாம் எப்படி எப்படி நிலத்தைக் கொடுக்க வேண்டும் என்பதற்குச் சட்டத்திலேயே வரம்பு முறைகள் வைத்திருக்கிறோம். அதன்படி கொடுக்கப்படும். ஒருவருக்கு ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்காவுக்கு மேற்படாமல் கொடுக்கப்படும்.

1973 மார்ச் 1]

திரு. ஏ. சுப்பிரமணியம்: துணைத் தலைவர் அவர்களே, உபரி நிலம் எவ்வளவு என்ற புள்ளிவிவரம் இல்லை என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தின் நிறைவேற்றல் எவ்வளவு முன்னேறியிருக்கிறது என்றாவது சொல்ல முடியுமா? திட்டவட்டமாக அதுபற்றி ஏதேனும் தகவல் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைத்ததற்குப் பிறகு நாம் ஏற்கெனவே 30 ஸ்டாண்டர்டு எக்கரா என்று நிர்ணயித்திருந்த சட்டத்தின்கீழ் எவ்வளவு வைத்திருந்தார்களோ அவர்களில் யார், யார் பாதிக்கப்படுவார்கள் என்று கணக்கெடுத்து அவர்களுக்கெல்லாம் நோட்டீஸ் கொடுத்து—கொடுக்க வேண்டிய நோட்டீசுக்குக் கால வரம்பு இருக்கிறது; சட்டப்படி கொடுத்தாக வேண்டும்—அதன்படி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். சீக்கிரத்தில் முடிவடையும் என்று நம்புகிறேன்.

திரு. முனு ஆதி: துணைத் தலைவர் அவர்களே, உச்ச வரம்பின்மூலம் மிச்ச நிலம் இல்லாவிட்டாலும், காட்டிலாகாவில் ஒன்றுக்கும் உபயோகம் இல்லாத நிலங்களை விவசாயப் பண்ணைகளை உருவாக்கிப் பயிரிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: உச்ச வரம்பில் மிச்ச நிலம் நிச்சயம் இருக்கும். காட்டிலாக்காவிற்குத் தேவையற்ற நிலத்தை எடுத்து வேலையற்றவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நினைவுபடுத்துகின்றேன்.

திரு. ந. சோமசுந்தரம்: அரசாங்கம் உபரி நிலங்களை அளிக்கும்போது யாருக்கு முன் உரிமை அளிக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சட்டத்திலும், சட்டத்திற்குட்பட்டு போடப்பட்டிருக்கிற விதிகளிலும் யார் யாருக்கு எப்படி நிலத்தைக் கொடுப்பது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(i) A person who is completely dispossessed of his holding by virtue of the provisions of the Act or as a result of any irrigation or hydro-electric project;

(ii) A person whose extent of holding is reduced below 3 standard acres held by him partly as cultivating tenant and partly as owner or wholly as cultivating tenant, by virtue of the provisions of the Act;

(iii) A person who is or who has been a member of the Armed Forces, including persons who have served in the Indian National Army and members of the Armed Forces who retired or were disbanded before the 26th January 1950.

(iv) A co-operative farming society, the members of which are landless agricultural labourers or landless persons or a combination of both :

Provided that the extent of land assigned to the society together with the land, if any already held by the society does not exceed the ceiling area of such society.

(v) A landless agricultural labourer who is likely to engage himself in direct cultivation:

(vi) A landless person, who is likely to engage himself in direct cultivation; and

(vii) A cultivating tenant who is holding land which is less than 5 standard acres in extent.

திரு. எஸ். வடிவேல்: துணைத் தலைவர் அவர்களே, அந்த உச்ச வரம்புச் சட்டத்தின்மூலம் கிடைக்கும் உபரி நிலத்தை விவசாயத் தொழிலாளிகளுக்கு முன்னுரிமை அளித்துக் கொடுக்க அரசு முன்வருமா? அவர்கள்தான் மிகவும் குறைந்த வசதியுள்ள நிலையில் வாழ்கிறார்கள். ஆகவே, அதுபற்றி யோசித்து முன்னுரிமை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நிலத்தை உழுதுகொண்டிருப்பவர்களுக்கே முன்னுரிமை அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. சு. துரைசாமி: உச்ச வரம்புச் சட்டத்தின்மூலம் உபரியாக வரும் நிலங்களை எடுப்பதற்கு நோட்டீஸ் கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த நோட்டீஸ் கொடுத்து எடுப்பதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது ஒவ்வொரு கேசைப் பொறுத்தது. சில பேர் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். எவ்வளவு காலம் கொடுக்க வேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறது. சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கால வரம்பைக் கொடுத்தே தீர வேண்டும். அதற்குமேல் யாருக்கும் கொடுக்கப்படமாட்டாது.

1973 மார்ச் 1]

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த வழக்குகளெல்லாம் தீர்ந்த பிறகுதான் நிலம் நமது கைவசம் வரும் என்று இருந்தாலும்கூட, இந்தச் சட்டத்தினுல் மிச்சம் வருகின்ற நிலத்தின் அளவு எவ்வளவு என்பதை அரசு அறிவிப்பதற்கு இன்னும் எவ்வளவு கால தாமதம் ஏற்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கால தாமதத்திற்குக் காரணம் நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிருர்கள் என்று சொன்னேன். நோட்டீஸ் கொடுப்பதிலே சில சமயங்களில் கால தாமதம் இருக்கலாம். அதைத்தவிர வேறு எந்த கால தாமதமும் கிடையாது. எவ்வளவு உபரி நிலம் கிடைக்கும் என்ற புள்ளி விவரம் இங்கே இல்லை என்று சொன்னேன். தனிக் கேள்வி போட்டால் உபரி நிலம் எவ்வளவு கிடைக்கும் என்று அரசாங்கம் கருதுகிறது என்ற புள்ளி விவரம் கொடுக்க முடியும்.

திரு. எம். தேவராசன் : இந்த நிலை உச்ச வரம்பு சட்டத்தைத் தேயிலைத் தோட்டங்களுக்கு விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ப்ளாண்டேஷனைப்பற்றி இப்பொழுது ஒன்றும் இல்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர் : மடங்கள், ஆதீனங்கள் இவைகளை உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் கொண்டுவராமல், தொடர்ந்து அவற்றின் நிலங்களுக்கு விதி விலக்கு அளிப்பதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வரவு-செலவுத் திட்டத்தில் முதல் அமைச்சர் அவர்கள் படித்த முக்கியமான அம்சங்களில் ஒன்று, யார் யார் நிலத்தைக் குத்தகைக்கு உழுது கொண்டிருக்கிருர்களோ அவர்களுக்கு வாங்கும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதாகும். அதன்மூலம் அவர்கள் நிலத்தை வாங்கிக்கொண்டு சொந்தமாக்கிக்கொள்ளலாம்.

திரு. எம். சுரேந்திரன் : நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவருகிறபோது அது எந்தமாதிரிப் பலனளிக்கும், எந்த அளவு நிலம் கிடைக்கும் என்கிற விவரங்களை எல்லாம் ஆராய்ந்து கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டு வந்திருப்பது உண்மையானுல் எவ்வளவு நிலம் கிடைக்கும் என்கிற விவரம் இருந்தாக வேண்டும். அமைச்சர் அவர்கள் அம்மாதிரிப் புள்ளிவிவரம் இல்லை என்று கூறுகிருர்கள். இது உச்சவரம்பு சம்பந்தமான கேள்வி. அத்தகைய புள்ளிவிவரம் இல்லாமல் ஏன் அமைச்சர் அவர்கள் வந்தார்கள் என்பதற்கு விளக்கம் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்த விவரம் தற்போது என் கைவசம் இல்லை என்று சொன்னேன். துணைக் கேள்வி போடுகிறபோது மூலக் கேள்வியை ஒட்டியதாக—மூலக் கேள்வியைப் படித்துப் பார்த்திருந்தால்—போட்டிருப்பார் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் உபரியாகக் கிட்டும் நிலங்களை மாதிரிக் கூட்டுப்பண்ணை முறையில் செயல்படுத்துவதுபற்றியது மூலக் கேள்வி.

திரு. சோ. அழகர்சாமி : உபரி நிலங்களைக் கூட்டுப் பண்ணை முறையில் கொண்டுவர முடியாது, அந்த நிலங்கள் மொத்தம் எவ்வளவு என்கிற விவரம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாம் இப்போது கரும்புக்கு அளித்திருந்த விலக்கை, மேய்ச்சலுக்காக அளித்திருந்த விலக்கை, பால் பண்ணைக்காக அளித்திருந்த விலக்கை ரத்து செய்துவிட்டோம். ஆகவே அவற்றுக்காக ஒதுக்கியிருந்த நிலங்களையாவது எடுத்து, அரிசனத் தொழிலாளர்களைச் சேர்த்துக் கூட்டுப்பண்ணை முறையை ஏற்படுத்தி அவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பல கேள்விகளை ஒன்றாக இணைத்துப் போட்டிருக்கிறார்கள். கரும்புக்காக அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்கை ரத்து செய்து விட்டாலும், அதற்கென்று தனி கார்ப்பரேஷன் நிறுவ ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அங்கங்கே சிறுசிறு நிலம் உடையவர்கள் ஒன்றுசேர்ந்து கூட்டுப்பண்ணைகளை ஆரம்பித்துக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் குத்தகைக்காரர்களுக்கு நிலத்தை உடைமையாக்க ஏற்பாடு செய்கிறோமேதவிர கூட்டுப்பண்ணை அடிப்படையில் அல்ல.

திரு. என். கிட்டப்பா : நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அதிக நிலம் கிடைக்காது போக, மடங்கள், கோயில்கள், மிராசுதார்கள் பினாமியாக எழுதி வைத்திருக்கிறார்களே, இந்த பினாமி டிரான்சாக்ஷனைக் கண்டுபிடிக்க அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைக் கண்டுபிடிப்பதற்குத்தான் பட்டா பாஸ் புக் கொடுக்கும் முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். யார் யாரிடம் பட்டா இருக்கிறதோ அவர்களுக்குத்தான் பாஸ் புக் கொடுக்கப் படும்.